# தமிழ்நாடு சர்க்கரைக் கழகம் லிட்.

# மக்கள் சாசனம்

தொழில் துறை
தமிழ் நாடு அரசு

# தமிழ்நாடு சர்க்கரைக் கழகம் லிமிடெட்

## மக்கள் சாசனம்

தமிழ்நாடு சர்க்கரைக் கழகம் இந்திய நிறுமங்கள் சட்டம் 1956–ன்படி ஒரு நிறுமமாக 1974ஆம் ஆண்டு தமிழக அரசால், தமிழ்நாட்டில் பொதுத்துறையின்கீழ் சர்க்கரை ஆலைகள் ஏற்படுத்தும் நோக்கத்துடன் தொடங்கப்பட்டது. தமிழ்நாடு சர்க்கரைக்கழகத்தின் கட்டுப்பாட்டில் தஞ்சாவூர் மாவட்டம் குருங்குளத்தில் அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலையும், மதுரை மாவட்டம் பாண்டியராஜபுரத்தில் மதுரா சர்க்கரை ஆலையும் உள்ளன. 1976ஆம் ஆண்டு தமிழ்நாடு சர்க்கரைக்கழகத்தின் துணை நிறுவனமாக பெரம்பலூர் சர்க்கரை ஆலை என்ற நிறுமம் தொடங்கப்பட்டது. இந்நிறுமம் பெரம்பலூர் மாவட்டம் எறையூர் என்ற கிராமத்தில் ஒரு சர்க்கரை ஆலையை நிறுவியுள்ளது. தமிழ்நாடு சர்க்கரைக் கழகம் மற்றும் பெரம்பலூர் சர்க்கரை ஆலையின் பதிவு அலுவலகங்கள் சென்னையில் அமைந்துள்ளன. தமிழ்நாடு சர்க்கரைக் கழகமும் பெரம்பலூர் சர்க்கரை ஆலை நிறுமமும் ஒரே தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் தலைமையில் இயங்குகின்றன.

## 2. நோக்கம்

கரும்பு சாகுபடிக்கு ஊக்கமளித்து சர்க்கரை ஆலைகளை நிறுவி வேலை வாய்ப்பை உருவாக்கி கிராமப்புற மற்றும் பின்தங்கிய பகுதிகளில் பொருளாதாரத்தை மேம்படுத்துவதே இந்நிறுவனத்தின் முக்கிய நோக்கமாகும்.

## 3. குறிக்கோள்கள்

1. அதிக சர்க்கரைச் சத்துள்ள இரகங்களைப் பயிர் செய்து சர்க்கரைக் கட்டுமானத்தை அதிகப்படுத்துதல்
2. புதிய சர்க்கரை ஆலைகள் அமைக்கவும் ஆலைகளை விரிவாக்கம் செய்யவும் ஆலோசனை வழங்குதல்

## 4. நிறுமத்தின் முக்கிய பணிகள்

அ) கூட்டுறவு மற்றும் பொதுத்துறையில் புதிய சர்க்கரை ஆலைகள் நிறுவுவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்தல்

ஆ) கூட்டுறவு மற்றும் பொதுத்துறை ஆலைகளில் இணைமின் உற்பத்தி நிலையங்கள் நிறுவுவதை ஆராய்தல்

இ) தொழில் நுட்பம் சார்ந்த மற்றும் தொழில் நுட்பம் சாராத கூட்டுறவு சர்க்கரை ஆலைகளுக்கு ஆலோசனை வழங்குதல்

ஈ) கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளின் செயல்பாட்டை கண்காணித்தல்

உ) கூட்டுறவு சர்க்கரை ஆலைகளின் கரும்புப் பதிவுத் திட்டத்திற்கு வழிகாட்டுதல்/ திட்டமிடுதல்

**5. கரும்பு விவசாயிகள் தொடர்பான பொதுத்துறை சர்க்கரை ஆலைகளி ன் செயல்பாடு**

பொதுத்துறை ஆலைகளின் தலைமை நிர்வாகிகள் கரும்பு சாகுபடியாளர்கள் கரும்பைப் பதிவு செய்து ஆலைக்கு வழங்கத் தேவையான வசதிகளைச் செய்து கொடுக்கும் அதிகாரம் பெற்றுள்ளனர். அவர்கள் கரும்பு விவசாயிகளுடன் கீழ்க்கண்ட முறைகளில் நேரடித்தொடர்பு கொண்டுள்ளனர்.

அ) ஆலையின் தேவைக்கேற்ப சாகுபடி செய்யும் விவசாயிகளிடம் கரும்பை பதிவு செய்தல்

ஆ) கரும்பு சாகுபடி. மகசூல் மற்றும் சர்க்கரைக் கட்டுமானம் அதிகரிக்க விவசாயிகளுக்கு விரிவாக்கச் சேவை புரிதல்

இ) கரும்பை நன்கு சாகுபடி செய்யத் தேவையான இடுபொருட்களை வழங்குதல்

ஈ) கரும்பு சாகுபடி செய்ய, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி மற்றும் தேசீயமயமாக்கப்பட்ட வங்கிகளில் சாகுபடிக் கடன் பெறுவதற்குச் சிபாரிசு செய்தல்

உ) முன்னுரிமைப்படி கரும்புக்கு வெட்டு உத்தரவு தருதல் மற்றும் அதில் மாறுபாடு இருப்பின் சரிபார்த்தல்

ஊ) அங்கத்தினர்கள் மற்றும் கரும்பு விவசாயிகள் கொடுத்த கரும்பிற்குக் கிரயத்தொகை வழங்குதல்

## 6. குறைகள் தீர்த்தல்

### அ. கரும்பு விவசாயிகள்

1) சர்க்கரை ஆலைகளின் தலைமை நிர்வாகிகள் அவ்வப்போது கரும்பு விவசாயிகளின் கூட்டம் நடத்தி அவர்களின் கோரிக்கைகளின்மீது தகுந்த நடவடிக்கை எடுக்கின்றனர்.

2) தலைமை நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகம் நடத்தும் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டங்களிலும் கலந்துகொண்டு கரும்பு விவசாயிகளின் குறைகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றனர்.

3) கிராம அளவிலான கூட்டங்களைத் தலைமை நிர்வாகி மற்றும் தலைமைக் கரும்பு அலுவலர் ஆகியோர் அவ்வப்போது நடத்தி விவசாயிகளின் குறைகளை அறிந்து தீர்வு காண்கிறார்கள்.

### ஆ. சர்க்கரை வணிகர் மற்றும் நுகர்வோர்

சர்க்கரை விற்பனைக்கென தனிக்குழு அமைக்கப்பட்டு சர்க்கரை ஒப்பந்தப்புள்ளி மீது முடிவெடுப்பதோடு சர்க்கரை வணிகருக்கு ஏதேனும் குறையிருப்பின் தீர்த்து வைக்கப்படுகிறது. சர்க்கரை ஆலைகளிலிருந்து சர்க்கரை வாங்குவதில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் முக்கிய நிறுவனமாக உள்ளது. தலைமை நிர்வாகி சர்க்கரையின் தரம் மற்றும் எடையில் ஏற்படும் குறைகளைத் தீர்க்க சர்க்கரை வாங்குவோரின் கூட்டத்தை அவ்வப்போது நடத்துகிறார்.

**தேவைப்படும் விவரங்கள் மற்றும் தகவல்களுக்குத் தொடர்பு கொள்ளவேண்டிய அலுவலர் :–**

1. பெயர் : திரு கை. பலராமன்

2. முகவரி : பொது மேலாளர்
தமிழ்நாடு சர்க்கரைக் கழகம்
690, அண்ணா சாலை
நந்தனம்,
சென்னை– 600035.

3. தொலைபேசி எண் : 2 4 3 3 0 2 2 2

4. நிகரி எண் : 0 4 4 – 2 4 3 3 0 6 2 4

5. மின் அஞ்சல் முகவரி: tasco@md3.vsnl.net.in